<u>இலங்கைத் துறைமுக அதிகாரசபை</u>

<u>அறிவித்தல்</u>

எனது இல: எச்ஆர்டி/ ஈஎக்ஸ்/ 06/ 112(i)

கீழே குறிப்பிடப்படும் பதவிக்கு வேண்டப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தமது பதவியில் நிரந்தரம் செய்யப்பட்டுள்ள இந்த அதிகாரசபையின் ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

<u>பதவி :- கனிட்ட முகாமையாளர் (புள்ளிவிபரம்) (கனிட்ட முகாமைத்துவ மட்டம்) - JLM</u>

**1. சம்பள வகையீடு:- JLM 2**

ஆரம்பச் சம்பளம் : ரூ. 75,065/=

சம்பள ஏற்றம் :- ரூ. 1,440/=

**11. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள்**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட வியாபார நிருவாகம் / சந்தைப்படுத்துதல் / முகாமைத்துவம் / வணிகம் / பொருளியல் / புள்ளிவிபரம் / கணிதம் / உரிய பாடங்களுடனான பட்டம்.

**அல்லது**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழில் சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட உரிய துறையின் டிப்ளோமா. (டிப்ளோமா கால எல்லை ஒரு (01) வருடமாக இருத்தல் வேண்டும்)

**அத்துடன்**

**அனுபவம்**

துறைமுக அதிகாரசபையில் மூன்று (03) வருட முனைப்பான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருத்தல்.

**அல்லது**

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில் சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட உரிய துறையின் டிப்ளோமா. (டிப்ளோமா கால எல்லை ஒரு (01) வருடமாக இருத்தல் வேண்டும்)

**அத்துடன்**

**அனுபவம்**

துறைமுக அதிகாரசபையில் ஐந்து (05) வருட முனைப்பான சேவைக் காலத்துடன் SG சம்பள வகையீட்டில் இருப்பவரொருவராக இருத்தல் வேண்டும்.

**அல்லது**

(இ) க.பொ.த (சா / த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் திறமைச் சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

**அத்துடன்**

**அனுபவம்**

துறைமுக அதிகாரசபையில் பத்து (10) வருட முனைப்பான சேவைக் காலத்துடன் SG சம்பள வகையீட்டில் இருப்பவரொருவராக இருத்தல் வேண்டும்.

**111. தெரிவு செய்யும் விஷேட காரணிகள்**

செயலாற்றுகை மதிப்பீடு திருப்திகரமான மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர் காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப நாட்டின் எந்தவொரு பகுதியிலும் அல்லது அதிகாரசபையின் எந்தவொரு பகுதி/பிரிவில் சேவை புரிய உட்படுவர்.

மாதிரிப் படிவங்களிற்கமைய ஒழுங்கு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024.07.19 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் பிரதான முகாமையாளருக்கு (மனிதவளம் மற்றும் நிருவாகம்) கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட பகுதி/பிரிவுத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் கல்வி மற்றும் தொழிற் சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப் பெற்றிராத விண்ணப்பங்கள் மற்றும் இவ்வறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு சகல வகையிலும் இணங்கப் பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குறிக்கப்பட்டுள்ள திகதிக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் சம்பந்தப்பட்ட பகுதி/பிரிவுத் தலைவர்கள் அல்லது வதிவிட முகாமையாளர்களினால் அவை தாமதமானதற்கான காரணங்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறு காரணங்கள் தெரிவிக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

ஒப்பமிட்டது / டி.ஆர்.டப்ளியூ. எலபாத
பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்)
2024.06.28 ஆந் திகதி
மனிதவளப் பகுதி.